வணிகவரித் துறை

அனுப்புநர்

டாக்டர் க .மணிவாசன், இ.ஆ.ப.,
வணிகவரி ஆணையர்,
எழிலகம், சேப்பாக்கம்,
சென்னை–5.

பெறுநர்

1) திரு S.A. ராஜ்கண்ணு,
தயாரிப்பாளர்,
ஸ்ரீ அம்மன் கிரியேஷன்ஸ்,
பிளாட் எண். 9,1 ஏ முதல் மாடி
குமரன் அவென்யூ,
பி.என். ராமமூர்த்தி தெரு,
வளசரவாக்கம்,
சென்னை – 87.

2) தென்னிந்திய திரைப்பட வர்த்தக சங்கம்,
அண்ணாசாலை,
சென்னை–600 006.

கடித எண். சட்டக்குழு–4/ 29603/ 2013 நாள் 31 .10.2013

அய்யா,

பொருள் : தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939 – திரைப்படங்கள் – தமிழில் பெயரிடப்பட்ட ' 16 வயதினிலே' தமிழ் திரைப்படத்திற்கு கேளிக்கை வரி விலக்கு கோரியது – ஏற்கனவே கேளிக்கை வரி விலக்கு அளிக்கப்பட்ட திரைப்படங்களில் ஏதேனும் மாற்றம் இல்லாத நேர்வில் அத்திரைப்படங்களுக்கு அளிக்கப்பட்ட கேளிக்கை வரி விலக்கு தொடரும் என்பது – தொடர்பாக.

1 அரசாணை (நிலை) எண்.72, வணிகவரி மற்றும் பதிவுத் துறை, நாள் 22.07.2006.
2 அரசாணை (நிலை) எண்.159, வணிகவரி மற்றும் பதிவுத் துறை, நாள் 22.08.2007.
3 அரசு கடிதம் எண்.21220/சி1/207–2, நாள் 23.10.2007.
4 அரசாணை (நிலை) எண்.89, வணிகவரி மற்றும் பதிவுத் துறை, நாள் 21.07.2011.
5 வணிகவரி ஆணையர் அவர்களின் செயல்முறை கடிதம் எண். சட்டக்குழு–4/ 29603/ 2013, நாள் 01. 10.2013 தேர்வுக்குழு எண்.72/2013–14.
6 வணிகவரி ஆணையர் அவர்களின் செயல்முறை கடிதம் எண். சட்டக்குழு–4/ 29603/ 2013, நாள் 04. 10.2013 தேர்வுக்குழு எண்.72/2013–14
7 அரசு கடித எண்.13000/சி1/2013–1, நாள் 16.10.2013

---

பார்வையில் காணும் கடிதங்களின் மீது தங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது.

பார்வை 5, காணும் வணிகவரி ஆணையர் அவர்களின் கடிதத்தில் "16 வயதினிலே " திரைப்படத்திற்கு தேர்வுக்குழு எண்.72/ 2013–14, –படி தேர்வுக்குழு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டது.

அதன்படி தேர்வுக்குழு உறுப்பினர்களால் "16 வயதினிலே என்ற திரைப்படம் பிரசாத் லேப் தியேட்டர் (தரைத்தளம்), சாலிகிராமம் சென்னை என்ற திரையரங்கில் **03.10.2013** மாலை **6.00** மணியளவில் முழுமையாகப் பார்க்கப்பட்டு அதன் அடிப்படையில் திரைப்படம் பார்வையிட்ட உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்ட பரிந்துரைகளை பரிசீலனை செய்து அதனடிப்படையில் மேற்கண்ட திரைப்படத்திற்கு கேளிக்கை வரி விலக்கு அளிப்பது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கும் பொருட்டு பார்வை 6–ல் காணும் கடிதத்தின் மூலம் அரசுக்கு அனுப்பப்பட்டது.

பார்வை 7–ல் காணும் அரசு கடிதத்தில் கீழ்கண்டவாறு விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

> "பார்வை ஒன்று மற்றும் இரண்டில் குறிப்பிட்டுள்ள அரசாணைகளின்படி தமிழில் பெயரிடப்பட்ட திரைப்படங்களுக்கு முழுமையான கேளிக்கை வரி விலக்குச் சலுகை பெறுவதற்கு அமைக்கப்பட்ட குழுவினால் '16 வயதினிலே' திரைப்படத்திற்கு பார்வை மூன்றில் குறிப்பிடப்பட்டுள்ள அரசு கடிதத்தில் கேளிக்கை வரி விலக்கு வழங்க பரிந்துரை செய்யப்பட்டு, கேளிக்கை வரி விலக்கு அளிக்கப்பட்டது.
>
> பார்வை நான்கில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாணையில் உள்ள வரையறைகள், திரைப்படங்களுக்கு கேளிக்கை வரிவிலக்கு கோரப்பட்டு அப்போதைய நிலையில் நிலுவையில் இருந்த விண்ணப்பங்களுக்கும் அதற்குபின் வரப்பெற்ற விண்ணப்பங்களுக்கும் மட்டுமே பொருந்தும் என ஆணையிடப்பட்டுள்ளது. ஏற்கனவே கேளிக்கை வரி விலக்கு அளிக்கப்பட்ட திரைப்படங்களில் ஏதேனும் மாற்றம் இல்லாத நேர்வில் அத்திரைப்படங்களுக்கு அளிக்கப்பட்ட கேளிக்கை வரி விலக்கு தொடரும்.
>
> மேற்கண்ட சூழ்நிலையில், திரைப்படங்களுக்கு ஏற்கனவே வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ள நிலையில் மீண்டும் கேளிக்கை வரிவிலக்கு வழங்க வேண்டிய அவசியம் எழவில்லை."

மேற்கண்ட அரசுக் கடிதத்தின் அடிப்படையில் இதற்கு முன்னர் கேளிக்கை வரியில் இருந்து முழுமையான விலக்களித்து ஆணை பிறப்பிக்கப்பட்ட தமிழிலேயே பெயர் சூட்டப்பட்ட பழைய, காப்புரிமை பெற்ற மற்றும் புதிய தமிழ் திரைப்படங்களில் மாற்றங்கள் ஏதும் இல்லாத நேர்வில், அத்திரைப்படங்களுக்கு அளிக்கப்பட்ட கேளிக்கை வரி விலக்கு தொடரும் என தெரிவிக்கப்படுகிறது.

ஓம்/–டாக்டர்க. மணிவாசன்
வணிகவரி ஆணையர்

நகல் :
அனைத்து இணை ஆணையர்கள்/துணை ஆணையர்கள்/
வரி விதிப்பு அலுவலர்கள்
இணை ஆணையர் (கணிப்பொறி மையம்)
இத்துடன் இணைக்கப்பட்ட கடிதத்தின் விவரங்களை
இணைய தளத்தில் (Internet & Intranet)
கேளிக்கை வரிகள் என்ற தலைப்பின் கீழ் தனியாக
வெளியிடுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

31.10.13
வணிகவரி அலுவலர்

31/10/2013